பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 05 ஞாயிற்றுக்கிழமை 21.08.2022 கதிர் 177

## 3 இந்தியப் பிரஜைகள் தங்கத்துடன் சிக்கினர்

ஒரு கோடி 80 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்துடன் இந்தியப் பிரஜைகள் மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் தங்கத்தைக் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 1,200 ☞2

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை உறுதி

## நீதி அமைச்சர் விஜேயதாஸ கருத்து



முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம். ☞2

## அதிரடி முடிவு எடுப்போம்

### பீரிஸ் கூறுகின்றார்



நாட்டின் நலன் கருதி தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

டலஸ் ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், நேற்று ☞2

## ரஞ்சன் இந்த வாரம் விடுதலை?



சிறையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்க இந்த வாரம் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவார் என நீதி அமைச்சர் விஜேயதாஸராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவரை விடுவிப்பதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் நீதி அமைச்சு வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ☞2

# அமைச்சுப் பதவிகளை அள்ளி வழங்க முடியாது

## மொட்டுத் தரப்பிடம் ரணில் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



**கொழும்பு,ஓகஸ்ட் 21**

**சர்வக்கட்சி அரசாங்கத்தில் பெரும்பாலான, முக்கிய அமைச்சுக்களை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு அப்படியே அள்ளி வழங்கினால் சர்வக்கட்சி அரசாங்கத்தின் உண்மை நோக்கம் இல்லாமல் போகும். ஆகவே அமைச்சுக்களை வரையறுத்து, சகல அரசியல் கட்சிகளின் வகிபாகத்துடனான அமைச்சரவையை ஸ்தாபிப்பதே தற்போது நிலைமைக்கு பொருத்தமானதாக அமையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ உட்பட, அக்கட்சியின் முக்கிய தரப்பினரிடம் குறிப்பிட்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.** ☞2



## மக்களை அடக்கி ஆட்சி செய்ய முடியாது!

### ரணிலுக்கு அநுர எச்சரிக்கை

போராட்டங்களை ஒடுக்கி, ஜனாதிபதி ரணிலால் ஆட்சியை முன்கொண்டு செல்ல முடியாது என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தை உடன் ☞2

## ஜனாதிபதி ரணிலின் தீர்மானங்களுக்கு மகாசங்கத்தினரின் ஆசீர்வாதம் உண்டு

### ஹேமரத்ன தேரர் தெரிவிப்பு



நாட்டைப் பற்றிய பொறுப்பில் இருந்து அனைவரும் விலகியிருந்தவேளையில், நாட்டைப் பற்றி சிந்தித்து, அதன் பாரிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, மகா சங்கத்தினரின் முழுமையான ஆசீர்வாதம் நிச்சயமாகக் கிடைக்கும் என்று ருவன்வெலிசேய விகாரை, சியாமோபாலி மகா நிகாயவின் மல்வத்து தரப்பு, ☞2

## மூன்று நாள்களாக நடுக்கடல் மணல் திட்டில் தவித்த 8 ஈழ அகதிகள் இன்று காலை மீட்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.21

இலங்கையில் இருந்து உயிர்பிழைக்க இந்தியாவிற்கு தப்பிச் சென்ற நான்கு சிறுவர்கள் உட்பட 8 பேர் 3 தினங்களாக நடுக்கடலில் மணல் திட்டு ஒன்றில் தத்தளித்து, தம்மைக் காக்குமாறு கோரிய நிலையில் இன்று காலை 9 மணிக்கே மீட்கப்பட்டனர்.

இலங்கையின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தமிழகம் நோக்கி படகில் ஏற்றிச்



## ஜனாதிபதி ரணிலின் தீர்மானங்களுக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஜரட்ட நுவர கலாவியே பிரதான சங்க நாயக்க பல்லேகம ஹேமரத்ன தேரர் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அனுராதபுர ருவன்வெலி மஹா சேய விகாரைக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிகளைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, விஹாராதிபதி தேரரை நேரில் சென்று சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர், விகாராதிபதி வண. பல்லேகம ஹேமரத்தன நாயக்க தேரரைச் சந்தித்த ஜனாதிபதி, தேரரின் நலன்களை விசாரித்ததுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அங்கு உபதேசம் வழுங்கிய தேரர், நாடு சகல அம்சங்களிலும் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ள வேளையில் ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

நாட்டுக்காக ஜனாதிபதி எடுக்கும் அனைத்து சரியான தீர்மானங்களுக்கும் மகா சங்கத்தினரின் ஆசீர்வாதம் கிடைக்கும் எனவும், அந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய திறமையான மற்றும் சரியான குழுக்களைத் தெரிவு செய்து, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக அவர்களை ஒரே இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் பொறுப்பு ஜனாதிபதிக்கு இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதன் பின்னர், லங்காராம மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி விக்கிரமசிங்க , லங்காராமாதிபதி வடமத்திய மாகாண பிரதம நீதிமன்ற சங்கநாயக வண. ரலபனாவே தம்மஜோதி நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்தார்.

அதன்பின்னர் தூபாராம விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விகாராதிபதி வண. கஹல்லே ஞானிந்த நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்தார்.

அங்கு சமயக்கிரியைகளில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசிர்வதித்தனர்.

பின்னர், மிரிசவெட்டிய ரஜமஹா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, விகாரையின் விகாராதிபதி வண. ஈத்தல வெடுனு வெவே ஞானதிலக நாயக்க தேரரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## மக்களை அடக்கி ஆட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைத்து, மக்கள் ஆணைக்கு இடமளிக்குமாறு வலியுறுத்தி நுகேகொடையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க , 134 பேரால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக ஆட்சி செய்கின்றார். எனவே அவர், தம்மைத் தெரிவு செய்த ராஜபக்சர்களைச் சந்தோசப்படுத்தும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றார். இதன் ஒரு கட்டமே யூனியன் பிளேஸ் பகுதியில் வைத்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் பேரணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

சம்பந்தமே இன்றி கைதுகள் இடம் பெறுகின்றன. மக்களை அச்சுறுத்தவே இப்படியான முயற்சிகள் இடம்பெறுகின்றன - என்றார்.

## மூன்று நாள்களாக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்ட 8 பேரையும் இலங்கைப் படகு ஓர் திடலில் இறக்கி விட்டுத் திரும்பிய நிலையிலேயே 8 பேரும் 3 தினங்களாக உணவோ அல்லது குடிதண்ணீரோ இன்றி மணல்திட்டில் கொடும் வெயிலில் தவித்தனர் .

மணல் திடலில் சிக்கித் தவித்தவர்கள் மிகத் தெளிவின்றிக் கிட்டிய தொலைசி பேசித் தொடர்பில் தங்கள் நிலைமை குறித்து இலங்கையில் உள்ளோருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் முதலில் இரு நாட்டுக் கடற்படையினரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டு தேடுதல் இடம் பெற்று 8 பேரும் இந்தியாவின கட்டுப்பாட்டில் உள்ள 3ஆம் தீடையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அவர்களை மீட்குமாறு நேற்று மாலை 6 மணிமுதல் கோரிக்கை விடப்பட்டது. இருந்தபோதும் இன்று காலை 9 மணிக்கே இந்தியக் கரையோரக் காவல்படையினர் அந்த 8 பேரையும் படகில் ஏற்றியுள்ளனர்.

ஆபத்து நிறைந்த கடல் பயணத்தை மேற்கொண்டு, தொடர்புகள் அற்ற பிரதேசத்தில் அந்தரிப்புப் பயணங்களை மேற்கொண்டும் தமிழ் நாட்டில் முகாமில் அடைபட்டே வாழ வேண்டும் என்பதனை அறிந்தும் மக்கள் அதிக பணத்தை செலுத்தி அங்கு பயணிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ரஞ்சன் இந்த வாரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி ஜனாதிபதி ஆவணங்களில் கையொப்பமிட்டதன் பின்னர் ரஞ்சன் ராமநாயக்க விடுவிக்கப்படுவார் என அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 04 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை தெரிந்ததே.

## அதிரடி முடிவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரத்துக்குப் பயணம் மேற்கொண்டனர்.

ருவன்வெலிசாய உள்ளிட்ட வழிபாட்டு தலங்களுக்குச் சென்று வழிபட்டதுடன், மகாசங்கத்தினரையும் சந்தித்து ஆசி பெற்றனர்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அநுராதபுரம் என்பது வரலாற்று சிறப்பு மிக்க இடமாகும். அந்த ரஜரட்ட மண்ணில் இருந்து எமது செயற்பாடு ஆரம்பமாகின்றது. - எனவும் குறிப்பிட்டார் பீரிஸ்.

## அமைச்சுப் பதவிகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும்,பொதுஜன பெரமுவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் முக்கிய தரப்பினருக்கும் இடையிலான பேச்சுகள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்றில் தற்போது 145 ஆசனங்களைக் கொண்டுள்ளது. ஆகவே அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து அமைக்கப்படும் சர்வக்கட்சி அரசாங்கத்தில் பெரும்பாலான முக்கிய அமைச்சுக்களை பொதுஜன பெரமுனவிற்கு வழங்குமாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ உட்பட அவரது தரப்பினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று கூறப்பட்டது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. சர்வக்கட்சி அரசாங்கத்தின் வியூகம் தொடர்பில் அனைத்து அரசியல் கட்சியினரும் தங்களின் யோசனைகளை முன்வைத்துள்ளார்கள், முன்வைக்கப்பட்ட யோசனைகள் பரிசீலனை செய்யப்படுகின்றன என தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சரவையின் எண்ணிக்கையை வரையறுக்க வேண்டும் என்றார்.

இராஜாங்க அமைச்சு அவசியமற்றது என்பது அரசியல் கட்சிகளின் பிரதான பரிந்துரையாகவுள்ளது. ஆகவே பெரும்பாலான முக்கிய அமைச்சு பதவிகளை பொதுஜன பெரமுனவிற்கு வழங்கினால் அது சர்வக்கட்சி அரசாங்கத்தின் வியூகத்தை கேள்விக்குள்ளாக்கும். அனைத்து கட்சிகளின் வகிபாகத்துடன் வரையறுக்கப்பட்ட அமைச்சரவையை ஸ்தாபிப்பது பிரதான நோக்கமாகவுள்ளது எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியராய்ச்சி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட பொதுஜன பெரமுனவின் 16 பேருக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறு பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

மறுபுறம் நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோருக்கு அமைச்சு பதவிகளை வழங்க வேண்டாம் என பிரதான எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளன எனவும் அறிய முடிகிறது.

அத்துடன் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கையை வர்த்தமானியில் வெளியிட வேண்டாம் என்ற கோரிக்கையும் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சுக்களின் விடயதானங்களை தனித்தனியாக வேறுப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அரசியல் கைதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய முதல் கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அவற்றுள் அரசியல் கைதிகள் விவகாரமும் ஒன்று. இதனைக் கருத்தில்கொண்டு அரசு செயற்படும் - என்றார்.

## 3 இந்தியப் பிரஜைகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள், சுங்க அதிகாரிகளுக்குத் தெரியாமல் தங்கத்தைக் கொண்டு செல்ல முயற்சித்துள்ளனர்.

38, 35, 28 வயதான மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீனாவை சமாளிப்பது எப்படி?

அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாயின் இன்றைய நிலையில் அதற்கு ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுவதுதான் என்பது தெளிவு.

நேரத்துடன் அந்த முடிவை எடுக்காதமை தமது அரசியல் தலைமைத்துவத்தில் தான் மேற்கொண்ட மிகப் பெரிய தவறு என்று பதவியை விட்டு ஓட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருந்தார்.

காலதாமதமாக்கி அந்தத் தவறை அவர் இழைத்துக் கொண்டிருக்கின்றார் என்று கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாகவே அப்போது எதிரணித் தரப்பில் தம் கட்சி சார்பில் ஒரேயொரு எம்.பியாக அமர்ந்தபடி இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறிக் கொண்டிருந்தார் என்பதும் மறக்க கூடியதல்ல.

இன்று நிலைமை கையை மீறிய கட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கால்களில் விழுந்தாயிற்று.

சர்வதேச நாணய நிதியம் பிணை எடுப்பது என்றாலும், அது விதிக்கும் பல கட்டுப்பாடுகள், விதிமுறைகளுக்கு இலங்கை இணங்கிப் போவது கட்டாயம்.

இலங்கை தான் பெற்ற கடன்களைச் செலுத்த வேண்டிய தரப்புகளுக்கு அந்தக் கடப்பாடுகள் தொடர்பில் ஒழுங்கு ஒன்றைச் செய்து, இணக்கத்துக்கு வரவேண்டும். உடனடியாக கடன் கடப்பாடுகளை ஒரேயடியாக மீளச் செலுத்த முடியாது. அதனால் நீண்ட கால அடிப்படையில் – நியாயமான காலக்கிரமத்தில் – கடனை மீளச் செலுத்துவதற்கான ஒழுங்கை அந்தந்தத் தரப்புகளோடு செய்து கொள்ள வேண்டும் என்று நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளது.

தவிர்க்க முடியாத – கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய – நிபந்தனை இது.

இவ்விடயம் தொடர்பில் கடன் வழங்கிய தரப்புகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களைத் தொடங்கியுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கிய தரப்புகளின் உத்தேச கணக்குகளின் படி 10 பில்லியன் டொலர் இலங்கைக்கு மொத்தம் கடன் நிலுவையாக உள்ளது. இதில் 44 வீதம் சீனாவுக்கு. ஜப்பானுக்கு 32 வீதம். இந்தியா பத்து வீதம். தென்கொரியா மூன்று வீதம். பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, ஹங்கேரி, சுவீடன், கனடா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் , சவுதி அரேபியா, அமெரிக்கா, குவைத், ஸ்பெயின் ஈரான் எஞ்சிய கடன் வழங்கியோர்.

ஆக, இலங்கை தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதாயின் அதற்காக, சீனா, ஜப்பான், இந்தியாவுடன் கடன் மீள் செலுத்துகை தொடர்பான புதிய ஒழுங்கைச் செய்து கொள்வது கட்டாயமாகும்.

அடுத்த மாதம் ஜப்பானுக்கு விஜயம் செய்யும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பான் தலைவர்களை இணங்க வைக்கும் முயற்சியில் வெற்றி பெறுவார் என நம்பப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை ஏற்கனவே 'வெளியுறவில் அயல் தேசத்திற்கு முன்னுரிமை' என்ற அடிப்படையில் தொப்புள் கொடி உறவாக இலங்கைக்கு உதவும் மனநிலையிலேயே இந்தியா உள்ளது. ஆகவே புதுடில்லியுடன் கடன் மீள் செலுத்துகை தொடர்பான புதிய ஒழுங்கை நேர் சீர் செய்து கொள்வது கொழும்புக்கு கஷ்டமாக இருக்கப் போவதில்லை.

அடுத்த பெரிய தலையிடி சீனா. கடன் கொடுத்துத் தனது வலையில் கொழும்பை சீனா வீழ்த்தியுள்ளது என்பது இதைத்தான். சீனாவைக் கொழும்பு எப்படிச் சமாளிக்கப் போகின்றது? எப்படி சீனக் கடன் சுமையிலிருந்து மீளப் போகின்றது? இதுதான் இப்போது கொழும்பை நெருடும் பிரதான கேள்வி.

# முன்னாள் எம்.பி. சிவமகாரஜாவின் 16 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு

## தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தால் நேற்று அனுஷ்டிப்பு









(கலையமுதன்)

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும் 'நமது ஈழநாடு' பத்திரிகையின் பணிப்பாளருமான சி.சிவமகாரஜாவின் 16 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நேற்று (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

முன்னதாக தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்க வளாகத்திலுள்ள சி.சிவமகாரஜாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் உமாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வடமாகாண ஓய்வு நிலை மேலதிகக் கல்விப் பணிப்பாளர் செல்வின், யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை திட்டமிடல்பிரிவு விரிவுரையாளர் கபிலன், வலிகாமம் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் மகாலிங்கசிவம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ரதிகுலன் உட்பட கூட்டுறவு பணியாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வில் கூட்டுறவாளர் கௌர விப்பு, பணியாளர் கௌரவிப்பு என்பன இடம்பெற்றதுடன் விருது வழங்கலும் இடம்பெற்றது.

2006 ஒகஸ்ட் 20 ஆம் திகதி சி.சிவமகாராஜா தெல்லிப்பழையிலுள்ள அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எகிறும் மீன்களின் சந்தை விலைகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் மக்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அனைத்து தொழிற் துறைகளுமே பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் கடற்றொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமானது.

கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதற்கு மண்ணெண்ணெய் அதிகமாகத் தேவைப்படுவதால் தற்போது கடற்றொழிலில் ஈடுபடுவது மிகவும் குறைவடைந்துள்ளது.

இதனால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தையில் மீன்களுக்கான கேள்வி அதிகரிக்கப்படுவதோடு மீன்களின் விலைகளும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் மீன்களைக் கொள்வனவு செய்வதில் நாட்டம் காட்டுவதில்லை. அதிலும் மீன்களை கொள்வனவு செய்யும் மக்களும் தங்களது தேவைகளுக்குக் குறைவான வகையிலே மீன்களைக் கொள்வனவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

மீன்களின் விலை அதிகரிப்பு தொடர்பாக சாதாரண மக்கள் அதிருப்தி தெரிவிப்பதை போலேவே மீன் வியாபாரிகளும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

# தேர்ந்தெடுக்கப்பட்ட முறையின் கீழ் இனி கொரோனாப் பரிசோதனைகள்

குறைந்த எண்ணிக்கையிலான பி.சி.ஆர் மற்றும் துரித அன்டிஜன் பரிசோதனை கருவிகள் காரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட முறையின் கீழ் மக்களிடையே கொவிட் -19 வைரஸ் சோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சூழ்நிலைகளுக்கு மாத்திரம் பி.சி.ஆர். மற்றும் ஆர்.டீ.ரி பரிசோதனைகளை நடத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஒரு நாளில் கிட்டத்தட்ட 25 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகளை நடத்திய காலம் இருந்தது. துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் நாடு அத்தகைய சோதனை கருவிகளை கொள்வனவு செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

# கியு.ஆர். நடைமுறைகளை சரியாகப் பின்பற்றாத 12 எரிபொருள் நிலையங்களுக்கு தற்காலிக தடை

12 எரிபொருள் நிலையங்களுக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கியு.ஆர். நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றாமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மேலும் முப்பதாயிரம் கோடி ரூபாவுக்கு உக்ரைனுக்கு அமெ. இராணுவ உதவி!



வொஷிங்டன்,ஓக.21

உக்ரைனுக்கு மேலும் 775 மில்லியன் அமெரிக்க டொலர் (இலங்கை நாணய மதிப்பில் சுமார் முப்பதாயிரம் கோடி ரூபா) மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்குவதாக ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

அண்மைக் காலத்தில் உக்ரைனுக்கு அமெரிக்கா இராணுவ உபகரணங்களை வழங்குவது இது 19 ஆவது முறை ஆகும்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவக் கூட்டமைப்பில் உறுப்பினராக உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷ்யா, கடந்த பெப்ரவரி மாத இறுதியில் அந்த நாட்டின் மீது போர் தொடுத்தது. இந்த போரில் நேட்டோ நாடுகள் நேரடியாக பங்கேற்காத போதும் உக்ரைனுக்கு தேவையான உதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில் அமெரிக்கா உக்ரைனுக்கு தொடர்ந்து இராணுவ உதவிகளை அளித்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைனுக்கு மேலும் 775 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்குவதாக ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் அறிவித்துள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா மேலும் ராணுவ உதவியாக ஆளில்லா கண்காணிப்பு விமானங்கள், கண்ணிவெடி எதிர்ப்பு வாகனங்கள், அதிநவீன பீரங்கிகள் உள்ளிட்டவை முதல் முறையாக உக்ரைனுக்கு வழங்கப்பட இருப்பதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

உக்ரைனுக்கு அமெரிக்கா ராணுவ உபகரணங்களை வழங்குவது இது 19 ஆவது முறை என்பதும், ஜோ பைடன் பதவி ஏற்றது முதல் இதுவரை உக்ரைனுக்கு மொத்தமாக நான்கு லட்சத்து இருபதாயிரம் கோடி ரூபா மதிப்பிலான இராணுவ உதவி வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இம்ரான் கானின் உரைகளை நேரடியாக ஒளிபரப்பத் தடை!

## பாகிஸ்தானில் அரசியல் கெடுபிடி



இஸ்லாமாபாத்,ஓக.21

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் உரைகளை நேரடியாக ஒளிபரப்ப பாகிஸ்தான் ஊடக அமைப்பு தடை விதித்துள்ளது.

இஸ்லாமாபாத்தில் ஒரு பொது நிகழ்ச்சியில் பேசிய போது, இஸ்லாமாபாத் காவல் துறை அதிகாரி மற்றும் பெண் மாஜிஸ்திரேட்டை மிரட்டினார் எனத் தெரிவித்து பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் தலைவரான இம்ரான் கானின் நேரடி உரைகளை ஒளிபரப்ப பாகிஸ்தானின் ஊடக ஒழுங்குமுறை ஆணையம் தடை விதித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பாகிஸ்தான் இராணுவத்திற்கு எதிராகத் தொலைக்காட்சியில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை இம்ரானின் பி.டி.ஐ. கட்சி தலைவர் ஷாபாஸ் கில் வெளியிட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டார். அவர் பேசியது மிகவும் வெறுக்கத்தக்க மற்றும் தேசத்துரோகம் என்று அந்நாட்டின் ஊடக அதிகார மையத்தால் குற்றம்சாட்டப்பட்டு கில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இந்நிலையில் சிறையில் அடைக்கப்பட்ட இம்ரானின் பி.டி.ஐ. கட்சித் தலைவர் ஷாபாஸ் கில்லுக்கு ஆதரவாக இஸ்லாமாபாத்தில் பி.டி.ஐ. கட்சி பேரணி நடத்தியது.

பொலிஸ் காவலில் ஷாபாஸ் கில் கொடூரமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் என அக்கட்சி குற்றம்சாட்டியது. எதிர்க்கட்சிகளுக்கு ஒரு செய்தியை அனுப்பவும் மக்களை பயமுறுத்தவும் கில் பிடிபட்டு சித்திரவதை செய்யப்பட்டார் என்று இம்ரான் குற்றம் சாட்டினார்.

இம்ரான் கான் தமது உரையில் –

ஷாபாஸ் கில்லைச் சித்திரவதை செய்தமைக்காக இஸ்லாமாபாத்தின் பொலிஸ் ஐ.ஜி, துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மற்றும் பெண் மாஜிஸ்திரேட் ஆகியோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்வோம். ஐ.ஜியை விட்டு வைக்க மாட்டோம் என்று இம்ரான் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து, இம்ரானின் பதிவு செய்யப்பட்ட உரைகள் மட்டுமே ஒளிபரப்ப அனுமதிக்கப்படும் என்று பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது. இதன் மூலம் அனைத்து செயற்கைக்கோள் தொலைக்காட்சி சனல்களிலும் இம்ரான்கானின் நேரடி உரையை ஒளிபரப்ப உடனடியாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆணையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# புதனன்று உக்ரைனின் சுதந்திர தினம் பெரும் தாக்குதலுக்கு ரஷ்யா முஸ்தீபு?

## அதிபர் ஜெலென்ஸ்கி தம் மக்களுக்கு முன்னெச்சரிக்கை





கீவ், ஓக.21

உக்ரைன் மக்கள் அனைவரையும் வரும் வாரத்தில் அதிக எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்குமாறு உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மக்கள் தங்கள் நாட்டின் சுதந்திர தினத்தை கொண்டாட தயாராகி வரும் நிலையில், கிரிமியா பகுதிகளில் நடத்தப்பட்ட புதிய குண்டுவெடிப்புகள் மற்றும் அங்குள்ள அணுமின் நிலையத்திற்கு அருகில் நடத்தப்பட்ட ஒரு ஏவுகணைத் தாக்குதலில் பொது மக்கள் 12 பேர் காயமடைந்தனர்.

பிவ்டெனுக்ரைன்ஸ்க் அணுமின் நிலையத்தில் நேற்று நடந்த ரஷ்ய ஏவுகணை தாக்குதல் மற்றும் உக்ரைனின் மிகப்பெரிய ஜாபோரிஜியா அணுமின் நிலையத்திற்கு அருகே புதிய குண்டுவெடிப்பு தாக்குதல் ஆகியவை போரின் போது அணு விபத்து ஏற்படலாம் என்பது பற்றிய புதிய அச்சத்தை தூண்டியுள்ளன.

இந்நிலையில், வரும் 24 ஆம் திகதி புதனன்று உக்ரைன் சுதந்திர தினம் வருவதையொட்டி அங்கு தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

உக்ரைன் சோவியத் ஆட்சியில் இருந்து சுதந்திரம்பெற்ற31ஆவது ஆண்டுமுடிவடைவதை குறிக்கும் சுதந்திர தினம் கொண்டாடப்படுவதையொட்டி பதற்றம் அதிகரித்துள்ளதால், கார்கிவில் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து உக்ரைன் சுதந்திர தினத்திற்கு முன்னதாக ரஷ்யாவின் கொடூரத் தாக்குதல் நடக்கலாம் என நாட்டு மக்களுக்கு அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

“இந்த வாரம் ரஷ்யா அசிங்கமான, தீய செயலைச் செய்ய முயற்சி செய்யலாம் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்க விழிப்புடன் இருக்க வேண்டும்என்று அதிபர் ஜெலென்ஸ்கி கூறினார். சுதந்திர தினத் தாக்குதல் குறித்து உக்ரைனின் ஆயுதப் படைகளின் ரிசர்வ் கேணல் மற்றும் இராணுவ நிபுணர் ஒருவர் கூறுகையில், சுதந்திர தினத்தன்று உக்ரைன் மீது பெரும் ஏவுகணை தாக்குதலுக்கு பெலாரஸ் ஏற்கனவே தயாராகி வருகிறது. பெலாரஸிலிருந்து மட்டுமல்ல, கருங்கடல் மற்றும் ரஷ்யாவிலிருந்தும் எதிரி ஒரே நேரத்தில் மூன்று பக்கங்களிலிருந்தும் தாக்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

மறுமுனையில், ரஷ்யப் படைகளும் உக்ரைன் சுதந்திர தினத்தன்று உக்ரைனின் ஆயுதப் படைகளிடமிருந்து ஒரு பெரிய தாக்குதலை எதிர்பார்க்கின்றன்.

ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகத்தின் முக்கிய புலனாய்வு இயக்குநரகம் படி, “ஓகஸ்ட் 24 அன்று, அவர்கள்(உக்ரைன் தரப்பு) பெரும் படைகளுடன் எங்களைத் தாக்குவார்கள். அவர்கள் ஒரு பெரும் மரணதண்டனையை ஏற்பாடு செய்ய விரும்புகிறார்கள்என்று ரஷ்ய ரைாணுவ வீரர் ஒருவர் கூறினார்.

# புடினின் மூளையாகச் செயல்படும் டுகினின் மகள் கார் விபத்தில் கொல்லப்பட்டாரா..?

மொஸ்கோ,ஓக.21

ரஷ்ய அதிபர் புடினின் நெருங்கிய உதவியாளரின் மகள் கார் விபத்தில் பலியானார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

புடினின் நெருங்கிய உதவியாளரான அலெக்சாண்டர் டுகினின் மகள் டாரியா டுகினா, மொஸ்கோவில் அவர் பயணித்த கார் வெடித்ததில் கொல்லப்பட்டிருக்கலாம் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மொஸ்கோ பிராந்தியத்தில் உள்ள ஓடிண்ட்சோவ்ஸ்கி மாவட்டத்தில் கார் ஒன்று தீப்பிடித்து எரிந்தது என்ற செய்தி வெளியானது. இந்த விபத்தில் ரஷ்ய அரசியல் தத்துவவாதியும் ஆய்வாளருமான அலெக்சாண்டர் டுகின் மகள் உயிரிழந்திருக்கலாம்எனரஷ்யசெய்திநிறுவனம்தெரிவித்துள்ளது. நெடுஞ்சாலையில் விபத்து நடந்த இடத்திற்கு டுகின் வந்தார் எனவும் கூறப்படுகிறது.





கிரிமியா மற்றும் உக்ரைனில் ரஷ்ய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னால் இருந்தவர் அலெக்சாண்டர் டுகின் என்று கூறப்படுகிறது. டுகின் சில மேற்கத்திய ஆய்வாளர்களால் புடினின் மூளையாக செயல்படுபவர் என்று அடிக்கடி விவரிக்கப்படுகிறார். டுகின் 2014 மற் றும் 2015 இல் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற் றும் கனடாவால் தடை விதிக்கப்பட்டவர். டுகினின் மகள் டாரியா டுகினா இந்த ஆண்டு ஜுலை மாதம் இங் கிலாந்தால் தடை விதிக்கப்பட்டவர் ஆவார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மும்பையில் மீண்டும் பயங்கரவாத தாக்குதலா? பாகிஸ்தானிலிருந்து வந்த மிரட்டலால் பரபரப்பு



மும்பையில் இருந்து சுமார் 190 கி.மீ. தொலைவில் உள்ள அலிபாக், ஸ்ரீவர்தன் கடற்கரை பகுதியில் ஆள் இல்லாத மர்ம படகு ஒன்று நேற்று கரை ஒதுங்கியது. அதில் 3 ஏ.கே.-47 துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் இருந்தன. தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் படகை கைப்பற்றி தீவிர விசாரணை நடத்தினர்.

இதில் அந்தப் படகு ஆஸ்திரேலியா நாட்டு பெண்ணுக்கு சொந்தமானது என்றும், கடந்த ஜூன் மாதம் விபத்தில் சிக்கிய போது நடுக்கடலில் கைவிடப்பட்ட நிலையில் தற்போது அது மும்பை அருகே கரை ஒதுங்கியதாகவும் தெரியவந்தது.

இந்தநிலையில், மும்பை போக்குவரத்து பொலிஸாரின் வாட்ஸ் அப் எண்ணிற்கு பாகிஸ்தான் நாட்டு தொலைபேசி எண் ஒன்றிலிருந்து, 2008 இல் நடந்தது போன்ற பயங்கரவாத தாக்குதல் குறித்த எச்சரிக்கை குறுஞ்செய்தி வந்துள்ளது. அதில் இந்தியாவில் 6 பேர் தாக்குதலை நிறை வேற்றுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மும்பை தீவிரவாத தடுப்புக் குழு, மும்பை பொலிசார் மற்றும் மத்திய புலனாய்வு அமைப்புகள் தீவிரமாக விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

மகாராஷ்டிரா தலைநகர் மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்த வந்த நபர்கள் கடல் வழியாக ஊடுருவி தாக்குதல் நடத்தியதில் சுமார் 250 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

700 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

## தங்க கடத்தலுக்கு உடந்தையாக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரி கைது

கேரள மாநிலத்தின் கோழிக்கோடு கரிப்பூர் விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரியாகப் பணியாற்றி வந்த பொள்ளாச்சியைச் சேர்ந்த பி.முனியப்பன் என்பவர் தங்கக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி அதிகாலை துபாயில் இருந்து வந்த ஏயார் இந்தியா விமானத்தில் கோழிக்கோடு வந்த காசர்கோட்டையைச் சேர்ந்த இருவர் தலா 320 கிராம் வீதம் தங்கம் வைத்திருந்தாலும், 320 கிராம் தங்கத்திற்கு மட்டும் வரி செலுத்தி அதற்கான அத்தாட்சி ஆவணங்கள் பெறப்பட்டதாகவும், மீதமுள்ள 320 கிராம் தங்கத்தை அன்றைய தினம் சுங்கத்துறை அதிகாரியாக கடமையிலிருந்த முனியப்பன் தங்கத்தை கொண்டு வந்தவர்களுடன் மறைமுக ஒப்பந்தம் செய்து கொண்டு வரி விதிக்காது எடுத்து வைத்துக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு எடுத்துவைத்த தங்கத்தை விமான நிலையத்திற்கு வெளியே ஓரிடத்தில் கொண்டு வந்து தருவதாக முனியப்பன் ஒப்புக்கொண்டதாகவும், அதற்காக ஒரு தொகைப்பணத்தை அவர் பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்ததாகவும் கூறப்படுகிறது. அது குறித்து, கோழிக்கோடு மாவட்ட காவல்துறைக்குக் கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து, குறித்த சுங்கத்துறை அதிகாரி தங்கி இருந்த வீட்டில் பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர். அப்போது அவரிடம் கடத்தல்காரர்களுக்கு கொடுப்பதற்காக பதுக்கி வைத்திருந்த 320 கிராம் தங்கமும், 4 லட்சத்து 42 ஆயிரத்து 980 பணமும், விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள், இந்தியாவை சேர்ந்த நால்வரின் கடவுச்சீட்டுகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. இதையடுத்து பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

## மீண்டும் சந்திரனுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்துக்கு இந்திய விஞ்ஞானி தலைமை!



வொஷிங்டன்,ஓக.21

ஆர்டெமிஸ் திட்டம் மூலம் நாஸா மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்பி பல்வேறு ஆய்வுகளை நடத்த உள்ளது. இந்த திட்டத்தின் மூத்த விஞ்ஞானியாக இந்தியாவைச் சேர்ந்த அமித் பாண்டே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 1969 ஆம் ஆண்டு அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா தனது 'அப்போலோ' திட்டம் மூலம் நிலவுக்கு முதல் முறையாக மனிதர்களை அனுப்பி வரலாறு படைத்தது. அதன் பிறகு தற்போது மீண்டும் நிலவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள நாஸா முடிவு செய்து அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு 'ஆர்டெமிஸ்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்படி நாஸா நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பி பல்வேறு ஆய்வுகளை நடத்த உள்ளது.

இந்த திட்டத்தின் மூத்த விஞ்ஞானியாக இந்தியாவைச் சேர்ந்த அமித் பாண்டே தேர்வு செய்யப்பட்டுள்ளார். உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹல்த்வானி நகரில் பிறந்த அமித் பாண்டே, அங்குள்ள கேந்திரிய வித்யாலாயா பள்ளியில் படித்து பின்னர் வாரனாசி ஐ.ஐ.டி.யில் பி.டெக். பட்டம் பெற்றார். தொடர்ந்து அமெரிக்காவில் உள்ள அரிசோனா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற அவர், மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ளார். மேலும் பல ஆண்டுகளாக அமெரிக்காவில் ஆராய்ச்சி விஞ்ஞானியாக பணியாற்றி வரும் அமித் பாண்டே, மாணவர்களுக்கு இணையதளம் வாயிலாக கல்வி, வேலைவாய்ப்பு குறித்த ஆலோசனைகளை இலவசமாக வழங்கி வருகிறார். தற்போது நாஸாவின் நிலவு பயண திட்டத்தில் மூத்த விஞ்ஞானியாக தேர்வு செய்யப்பட்டுள்ள அமித் பாண்டேவுக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

# தலைவர் பதவியை ஏற்க ராகுல் காந்தி தயக்கம் பிரியங்காவுக்கு ஆதரவு வழங்க கட்சிக்குள் முடிவு?

காங்கிரஸ் கட்சித் தலைவராக ராகுல் காந்தி கடந்த 2017 ஆம் ஆண்டு பொறுப்பேற்றிருந்த நிலையில், 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்ததால் அவர் தலைவர் பதவியில் இருந்து விலகினார். அவரை மீண்டும் தலைவர் பதவியை ஏற்க வைக்க பல தடவை முயற்சிகள் நடைபெற்றுள்ள போதிலும் ராகுல் காந்தி பிடிவாதமாக தலைவர் பதவிக்கு வர மறுத்துவிட்டார். இதையடுத்து காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவராக பொறுப்பேற்ற சோனியா காந்தி தொடர்ந்து கட்சி பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சிக்கு வலுவான புதிய தலைவரைத் தேர்வு செய்ய வேண்டும் என்று கடந்த 2020 ஆம் ஆண்டு காங்கிரஸ் மூத்த தலைவர்கள் 23 பேர் போர்க்கொடி உயர்த்தியதையடுத்து, கட்சிக்கு புதிய நிர்வாகிகளை தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது. காங்கிரஸ் தலைவர் தேர்தல் 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 முதல் செப்டம்பர் 20க்குள் நடத்தி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை தலைவர் தேர்தலுக்கான எந்த அறிகுறியும் காங்கிரஸ் வட்டாரத்தில் காணப்படாததால் காங்கிரஸ் மூத்த தலைவர்களும், நிர்வாகிகளும் கடும் குழப்பத்துக்கும் தவிப்புக்கும் உள்ளாகியிருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.



காங்கிரஸ் தலைவர் பதவியை மீண்டும் ஏற்குமாறு ராகுல் காந்தியிடம் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றபோதிலும், ராகுல் எந்த பதிலும் சொல்லாமல் மௌனம் காத்து வருகிறார். அவர் மீண்டும் தலைவர் பதவியை ஏற்பாரா? என்பது சந்தேகத்துக்குரியதாக இருப்பதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காங்கிரஸ் மூத்த தலைவர்கள் அனைவரும் தனக்கு ஒத்துழைப்பு கொடுப்பதில்லை என்ற மிகப்பெரிய அதிருப்தி ராகுல்காந்தியிடம் இருப்பதே, அவரது தயக்கத்துக்கு காரணம் என்ன என்று கூறபட்டுகிறது. மூத்த தலைவர்கள் ஒத்துழைப்பு கொடுக்க முன்வந்தால் மட்டுமே தலைவர் பதவியை ஏற்பேன், என்று அவர் நிபந்தனை விதித்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. குஜராத் மாநில சட்டசபை தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ளதால் அதில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி கிடைக்குமா என்பது சந்தேகமாகவுள்ள நிலையில், தலைவர் பதவியை ஏற்றதும் முதலில் தோல்வி ஏற்பட்டால் மீண்டும் சர்ச்சை ஏற்படலாம் என்ற தயக்கமும் ராகுல் காந்தியிடம் உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ராகுல் காந்திக்கு தலைவர் பதவி மீது விருப்பம் இல்லாவிட்டால் அவரது சகோதரி பிரியங்காவை தலைவர் பதவிக்கு கொண்டு வரலாம் என்று பெரும்பாலான மூத்த தலைவர்கள் கருத்துத் தெரிவித்துவருகின்றனர். பிரியங்காவை முன்நிறுத்தினால்தான் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த முடியும் என்று அவர்கள் கூறி வருகிறார்கள். சோனியா, ராகுல் இருவர் மீதும் அமுலாக்கத்துறை விசாரணை மீண்டும் நடத்தப்படலாம் என்ற நிலையில் பிரியங்காவை தலைவர் பதவிக்கு கொண்டு வருவது தான் சிறந்தது என்ற கருத்தையும் மூத்த தலைவர்கள் வெளியிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகளுக்கு பன்மைத்துவம் தொடர்பில் பயிற்சிப் பட்டறை





உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மற்றும் பெண் சமூகத் தலைவர்களுக்கான பன்மைத்துவம் மற்றும் ஒன்றிணைத்தல் பற்றிய முழுநாள் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பு கல்லடி கிரீன் காடன் ஹோட்டலில் கடந்த வியாழன்று நடைபெற்றது.

இலங்கை சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு மாவட்ட சர்வமத பேரவையினால், சர்வமத பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் இது நடத்தப்பட்டது.

தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் என். பாசுதேவன், சர்வமத பேரவையின் மாவட்ட உதவி இணைப்பாளர் எச்.ஏ.எம். ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டனர்

வீட்டில், சமூகத்தில், அரசியலில் மற்றும் நாட்டில் பன்மைத்துவம் மிளிர வேண்டுமானால் இன,மத, மொழி மற்றும் அரசியல் பேதமின்றி விட்டுக்கொடுப்பு மனப்பாங்கு வளர்ந்து மனிதம் பேணப்படவேண்டும்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 25 சதவீதமாக கோட்டா முறையில் பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்பட்டதினால் இலங்கையில் 340 உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்ட 8,000 பேரில் 20 சதவீதமான பெண்கள் சுமார் 1,900 பேர் பிரதிநித்துவம் பெற்றுள்ளனர் என இந்நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொண்ட பேராதனைப் பல்கலைக் கழக அரசறிவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இரா. ரமேஷ் தெரிவித்தார்.

92 சதவீதம் எழுத்தறிவு கொண்ட இலங்கையின் சனத்தொகையில் சுமார் 53 சதவீதம் கொண்ட பெண்களுக்கு அரசியலில் சமத்துவம் இன்றி காணப்படுகிறது.

நெருக்கடியை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் பெண்களிடம் காணப்படுவதால் மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் ஊடாக இலஞ்சம் மற்றும் ஊழலற்ற முற்போக்கு சிந்தனையுள்ள பெண் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 உள்ளூராட்சி மன்றங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உள்ளூராட்சி மட்டத்தில் பன்மைத்துவத்தைப் பாதிக்கும் காரணிகள், பன்மைத்துவத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்களின் வகிபாகம், உள்ளூராட்சி நிறுவனங்களின்பன்மைத்துவத்தை கட்டியெழுப்புவதில் பெண்களின் வகிபாகம் பற்றி அறிக்கைகள் பெறப்பட்டு தெளிவூட்டப்பட்டனர்.

# கல்முனையில் நகை வியாபாரிகள் பிரச்சினைகள் குறித்து கலந்தாய்வு







நகைக்கடை வியாபாரிகள் தற்போது முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விழிப்பூட்டல் கலந்துரையாடல் ஒன்று கல்முனை தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் கலந்து கொண்டார்.

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நகைக் கடை உரிமையாளர்கள், நகை அடகு பிடிப்பாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் மற்றும் நகைக்கடைகளில் பணியாற்றும் பணியாளர்களின் விவரங்கள் தொடர்பில்எடுக்கப்படவேண்டியநடவடிக்கைகள் ஆகியன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

நகை கடை உரிமையாளர்கள் நகை அடகு பிடிப்பாளர்கள் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றிதமது கருத்துக்களைபகிர்ந்துகொண்டனர்.

மேலும் நகைக்கடை வியாபாரிகள் அடகு பிடிப்பாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு 0718591161 அல்லது 0672229226 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டனர்.

இக் கலந்துரையாடல் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் நெறிப்படுத்தினார். கல்முனை வர்த்தகர் சங்கத் தலைவர் கே.எம்.எம். சித்தீக் உட்பட நகை கடை உரிமையாளர்கள், நகை அடகு பிடிப்பாளர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# போதைப்பொருள் வியாபாரி கல்முனைப் பகுதியில் கைது

கல்முனை மாநகரத்தை அண்மித்த பகுதியில் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை சாகாமம் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கேரளா கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை சூட்சுமமாக விற்பனை செய்து வந்தவர் எனக் கூறப்படும் கல்முனைகுடி 12 பகுதியை சேர்ந்த 38 வயதான அப்துல் ஜப்பார் முகமட் றிஸ்வான் என்ற சந்தேக நபரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

தமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய விசேட அதிரடிப்படையினர் மாறுவேடத்தில் சென்று மேற்படி போதைப் பொருள்களை விற்பனை செய்ய முயன்ற சந்தேக நபரை கல்முனை அம்மன் கோவில் வீதியில் வைத்துக் கைது செய்துள்ளனர். சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் 4 கிராம் 42 மில்லி கிராம் மற்றுக் கேரளா கஞ்சா 765 கிராம் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபரை சான்று பொருள்களுடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் பாரப்படுத்தினர்.








# மைமுனா அரபுக் கலாபீடத்தின் முதலாவது பட்டமளிப்பு நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கடந்த 2018 இல் கல்முனை கிறீன்பீல்ட் வீட்டுத்திட்ட வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட மைமுனா அரபுக் கலாபீடத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மஃரிப் தொழுகையை தொடர்ந்து கல்முனை ஆசாத் பிளாசா மண்டபத்திலே இடம்பெற்றது.

மைமுனா அரபு கலாபீடத்தின் தலைவர் என். எம்.நௌாட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னிலை அதிதியாக கல்முனை மைமுனா அரபு கலாபீடத்தின் அதிபர் மௌலவி ஏ.எல். நாசரும், அதிதியாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முன்னாள் அதிபர் உலமா ஏ.சி.எம் சுபைரும் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதியாக கல்முனை பிரதேச செயலக பிரதேச செயலாளர்ஜே.லியாகத்அலி, கல்முனைஜும்மாபெரியபள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் டாக்டர் கே.எம்.ஏ. அஸீஸ் உட்பட முக்கிய உலமாக்களும், புத்திஜீவிகளும், வர்த்தகப் பிரமுகர்களும், கல்விமான்களும், ஊடகவியலாளர்களும் பட்டம் பெறும் ஆலிமாக்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

எட்டு மாணவிகள் ‘மைமூனிய்யா ஆலிமா’ பட்டம்பெற்று கௌரவிக்கப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜெனிவா மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்க கோட்டாபயவிற்கு எதிராகத் தயாராகின்றது மனு!







ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமை பேரவையில் கோட்டாபயவிற்கு எதிராக மனுவொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மனுவில், எம்மை இனப்படுகொலைக்குள்ளாக்கிய கோட்டாபயவையும் அதனுடன் தொடர்புடையவர்களையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனையைப் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று(சனிக்கிழமை) வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கட்சித் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் அழைக்கப்பட்டு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தன் நடராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்பாக அனைவரினதும் ஏகோபித்த கருத்தாக ஜெனிவா கூட்டு நாடுகளுக்கு அனுப்புவதற்கு மனுவில் கையொப்பமிட்டு அனுப்புவதற்காக இந்த கூட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தோம்.

கடந்த வருடம் ஜனவரி 15ஆம் திகதி அனைவரும் ஒற்றுமையாக ஒரு குரலில் கோரிக்கைகளை முன்வைத்தமை போன்று இந்தத் தடவையும் இதைச் செய்வதற்கு நாம் முன்னெடுத்திருக்கின்றோம். அதில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கின்றோம்.

இதற்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவை தெரிவித்திருக்கின்றது. நாங்கள் எழுதிய மனுவிற்கு ஆதரவாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஏனைய கட்சிகளும் வெளிப்படையாக கூறாவிட்டாலும் அவர்கள் ஏற்றுக்கொண்டதாக இங்கு வருகைதந்த பிரதிநிதிகள் கூறியிருக்கிக்கின்றார்கள். அதை தமது தலைமைப் பீடங்களுடன் கதைத்துத் தான் தமது இறுதி முடிவை அறிவிப்பார்கள்.

தனிப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் மூலமாகவோ, ஏதோ மிகுதி விடயத்தை கொண்டு சென்று, நமக்கு கால அவகாசம் போதாமல் இருப்பதால், நாங்கள் இன்றோ, நாளையோ, அவர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டாவது அவர்களின் அனுமதியை மின்னஞ்சல் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ, தொலைபேசியில் குறுஞ்செய்தி மூலமாகவோ அதனைப் பெற்று நாங்கள் கூடிய விரைவில் அதை அனுப்பி வைப்போம். ஏனென்றால் காலம் போதியதாக இல்லை.

இந்த அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து அந்த மனுவை அனுப்புவதாக உள்ளோம். அதைவிட இன்னொரு மனுவும் தயார் செய்து வைத்துள்ளோம்.

அது சமூக அமைப்புகளும், பாதிக்கப்பட்ட தரப்பினருமாக சேர்ந்து அனுப்புவதற்காக. அதிலே நாங்கள் அரசியல் தீர்வு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு, கையகப்படுத்தப்பட்ட நிலம், அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலம், விகாரைகளை அகற்றல் என ஆறு விடயங்களை உள்ளடக்கி இருக்கின்றோம். – எனத் தெரிவித்துள்ளார்.

## 10 லட்சம் ரூபாவையும் தாண்டியது இலங்கையின் தனிநபர் கடன்!

### நாளை பிறக்கும் குழந்தையும் கடனாளி

இலங்கை மத்திய வங்கியின் புதிய புள்ளிவிவரங்களுக்கு அமைய 2022 ஏப்ரல் மாதம் அளவில் இலங்கை அரசு செலுத்த வேண்டிய மொத்த கடன் 23 ஆயிரத்து 310.1 பில்லியன் ரூபா எனத் தெரியவந்துள்ளது.

மொத்த தேசிய கடன் 12 ஆயிரத்து 442.3 பில்லியன் ரூபா எனவும் வெளிநாட்டு கடன் 10 ஆயிரத்து 867.8 பில்லியன் ரூபா எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை அரசின் மொத்த கடன் 17 ஆயிரத்து 589.4 பில்லியன் ரூபாவாகப் பதிவாகி இருந்தது. அந்த கடன் தொகை நான்கு மாதங்களில் மேலும் 5 ஆயிரத்து 720.7 பில்லியன் ரூபா என 32.52 சத வீதம் அதிகரித்தது.

இதனிடையே தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் புள்ளி விவரங் களுக்கு அமைய 2021 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த சனத் தொகை 22.156 மில்லியனாகும்.

இதனடிப்படையில் கணக்கிடும் போது இலங்கையின் தனிநபர் கடன் 10 லட்சத்து 52 ஆயிரத்து 89 ரூபா. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அது 7 லட்சத்து 93 ஆயிரத்து 888 ரூபாவாக இருந்தது. இவற்றின் அடிப்படையில், இலங்கை குடிமக்கள் அனைவரும் 10 லட்சம் ருபா கடனாளிகள் என்பதுடன் நாளை பிறக்கப் போகும் குழந்தையும் நாட்டின் கடனாளிகள் பட்டியலில் அடங்கும்.

## 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளையுடைய தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்காதீர்!

2 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட தாய்மார்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டாம் என சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

05 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்டதாய்மார்கள்வீட்டுப்பணியாளர்களாக வெளிநாடுகளுக்குச் செல்லும் போது குடும்பப் பின்னணி அறிக்கையை வழங்குவதை கட்டாயமாக்கும் சட்டத் திருத்தத்துக்கு ஜூன் 27 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதன்படி, புதிய திருத்தங்களின் பிரகாரம், 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொண்ட தாய்மார்கள் வெளிநாடு செல்வதற்கு அனுமதிப்பதில்லை என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது.

மேலும், 2 வயது அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட தாய்மார்கள் வெளிநாட்டுப் பயணத்தின் போது குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கல்விக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலர் அலுவலகத்தில் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்றும் புதிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

## சிவில் சமூகத் தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார் ஐ.நா. அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகப் பணிப்பாளர்





(இ.கலையமுதன்)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய-பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்-கார் சிவில் சமூக தரப்பினரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளுக்கான குரலற்றவர்களின் குரல் அமைப்பினரை டேவிட் மெக்லாக்லன்-கார் சந்தித்துகலந்துரையாடினார்.இதன்போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரும் உடனிருந்தார்.

இந்த சந்திப்பில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் லீலாவதி ஆனந்தநடராஜா, எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பாதிக்கப்பட்ட தரப்புக்கள் நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2022இல் வெளியிடப்பெற்றது.